கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை

கலைப்பீடம்

முதலாம் வருடக் கலைமாணிப் பரீட்சை – பருவம் II – 2017/2018

**INR 1204: சர்வதேச உறவுகளின் செயன்முறைகள்**

நேரம்: **இரண்டு (02) மணித்தியாலங்கள்**

ஏதேனும் **நான்கு (04)** வினாக்களுக்கு விடையளிக்குக

1. **இரு** பகுதிகளுக்கும் விடையளிக்குக
   i. ஐக்கிய நாடுகள் சபையின் (UNO) உருவாக்கத்திற்கு தாக்கம் செலுத்திய நிகழ்வுகள் மற்றும் காரணங்களை சுருக்கமாக விபரிக்குக.
   ii. ஐக்கிய நாடுகளின் இலக்குகள் மற்றும் கட்டமைப்பினை வரையறை செய்க.
2. **இரு** பகுதிகளுக்கும் விடையளிக்குக
   i. காலனிமய ஒழிப்பு (Decolanization) என்றால் என்ன?
   ii. அணிசேரா இயக்கத்தின் (NAM) குறிக்கோள்களை சுருக்கமாக விபரிக்குக.
3. **ஒன்றில்**
   i. "இரு துருவ அதிகார சமநிலை உறவில் தொடர்ச்சியான பிரதான நிகழ்வுகள் பனிப்போர் காலத்தில் (1945-1989) நடைபெற்றது". கலந்துரையாடுக.

   **அல்லது**

   ii. "சமாதான நிலைப்பாடு (Détente) காலப்பகுதியில் உலகமானது பிரதான அதிகாரங்களுக்கிடையிலான பதற்ற நிலையில் இருந்து விடுபட்டு அமைதியினை அனுபவித்தது''. கருத்துரைக்குக.
4. பின்வருவனவற்றை ஆதாரமாகக் கொண்டு சர்வதேச முறைமையில் ஜப்பானின் எழுச்சியை விபரிக்குக:
   i. பிரதான கிழக்காசிய கூட்டு செழிப்பு கோளம் (Greater East Asia Co-Prosperity)
   ii. ஆக்கிரமிக்கப்பட்ட ஜப்பான் (Occupied Japan)
   iii. பொருளாதார அற்புதம் (Economic Miracle)
5. சோவியத் யூனியனின் உடைவிற்கு தாக்கம் செலுத்திய பிரதான நிகழ்வுகள் எவை? உமது விடையினை பொருத்தமான உதாரணங்களைக் கொண்டு நியாயப்படுத்துக.

(P.T.O)

6. சர்வதேச உறவுகளுக்குள் மத்திய கிழக்கு பிராந்தியத்தின் புவிசார் அரசியலின் முக்கியத்துவம் தொடர்பில் கட்டுரை ஒன்றை எழுதுக.

7. **இரு** பகுதிகளுக்கும் விடையளிக்குக

i. சர்வதேச உறவுகளில் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்களை வரையறை செய்க.

ii. சர்வதேச முறைமையில் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்களின் விருத்தி செய்யப்பட்ட வகிபங்கினை விபரிக்குக.

8. பின்வருவனவற்றில் <u>**மூன்றிற்கு (03)**</u> குறிப்புகள் எழுதுக:

i. மகாத்மா காந்தி

ii. கட்டுப்படுத்தல் கொள்கை (Containment Policy)

iii. மாவோ சேதுங் மற்றும் சீனா

iv. சுயேஸ் கால்வாய் நெருக்கடி

v. ஜப்பானின் சமாதான இராஜதந்திரம் (Peace Diplomacy of Japan)

***************